
குழந்தைத் திருமண தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள கல்வித் துறையைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர்களுக்கு, வரையறுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளையும் கடமைகளையும் பொறுப்புகளையும் அவர்கள் எளிமையாகப் புரிந்து கொண்டு செயல்படுவதற்காக உருவாக்கப்பட்டவைதான் இந்த நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள் (Standard Operating Procedure- SOP). குழந்தைத் திருமணத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பள்ளிக் குழந்தைகளுக்கு விளக்கி விழிப்புணர்ச்சியூட்டுவதுடன் அவர்களுக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டும் வகையில் இந்தப் புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இளந்தென்றல்

குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வருவோம்!

இளந்தென்றல்

# பள்ளி ஆசிரியர்கள்
# கல்வித் துறை
## நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்



unicef
for every child

## பள்ளி ஆசிரியர்கள்

## கல்வித் துறை

# நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்

இளந்தென்றல்

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாடு
மற்றும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு
வரும் திட்டத்துக்கான கருத்துப் பெட்டகம்

unicef
for every child

தமிழ் நாடு அரசு
வாய்மையே வெல்லும்

பள்ளி ஆசிரியர்கள் / கல்வித் துறை
School Teachers / Education Department

நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்
Standard Operating Procedure - SOP

முதல் பதிப்பு: மார்ச், 2020
First Edition: March, 2020

வெளியீடு :
மாநில கருவூல மையம், சென்னை - 600 020.
State Resource Centre, Chennai - 600 020.
Email: sbtamilnadusrc@gmail.com
044-24914147

வடிவமைப்பு:
THY Designers & Computers
Triplicane, Chennai - 600 005
044-42113807

# அறிமுகம்

குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகள், காவல் துறையினர், குழந்தைகள் நலக் குழுவினர், முன்னணிக் களப் பணியாளர்கள், பஞ்சாயத்து அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், பள்ளி ஆசிரியர்கள், கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு துறையினர் குழந்தைத் திருமணத் தடுப்புப் பணியில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகிறார்கள். குழந்தைத் திருமணத் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இவர்கள், தங்களது கடமைகளையும் பொறுப்புகளையும் எளிமையாகப் புரிந்து கொண்டு செயல்படுவதற்காக உருவாக்கப்பட்டவைதான் இந்த நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள் (Standard Operating Procedure - SOP). குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு நிவாரணம் வழங்கவும், தங்களது கடமைகளைச் சரிவர செய்யவும், உதவும் வகையில் இந்தப் புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது.

குழந்தைத் திருமண முறையை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வந்த சமூகமாக, நமது சமூகம் மாற வேண்டும். குழந்தைத் திருமணத் தடுப்பு என்பது நிகழவிருக்கும் திருமணத்தைத் தடுப்பதற்கான செயல்பாடு மட்டுமல்ல. வளரிளம் பருவத்தினருக்கு உடல்நலம், கல்வி, திறன் மேம்பாடு, சுகாதாரம் போன்ற பல்வேறு அம்சங்களும் சரிவர கிடைத்தால்தான் அவர்களின் முழுமையான வளர்ச்சி சாத்தியப்படும். இவர்களே, எதிர்காலத்தில் நமது சமூகத்தை மேம்பட்ட சமூகமாக மாற்றுவதற்கான முக்கியக் காரணியாகத் திகழ்வார்கள்.

ஆணைப்போல் பெண்ணுக்கும் இலக்குகள் உண்டு. ஒட்டுமொத்த வளர்ச்சியில் இருவருக்கும் உரிமை உண்டு. இதை சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் உணர வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எல்லாவிதமான சேவைகளும் தேவைப்படுகின்றன. சட்டரீதியான நிவாரணம், பாதுகாப்பு, உடல், மனநல சேவைகள், கல்வியைத் தொடர வாய்ப்பு... இப்படி உடனடி நிவாரணத்திற்கும் நீண்டகால வாழ்விற்குமான சேவைகள் தேவைப்படுகின்றன. இந்த நிலையில், வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள் அளிக்கும் துறையினர் அனைவரும் தனித்தனியே செயல்பட்டு வந்தால் உரிய பலன் கிடைக்காது. அனைத்துத் தரப்பினரும் இணைந்து

செயல்பட்டால்தான் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும். இதற்கான கூட்டுப் பயணத்தைத் தொடங்குவோம்.

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காகவும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகவும் மாநில கருவூல மையம் இந்தப் புத்தகத்தை உருவாக்கியுள்ளது. இந்த முயற்சிக்குத் துணை நிற்கும் தமிழக அரசின் சமூக நலத் துறை மற்றும் யுனிசெஃப் அமைப்பை நன்றியுடன் நினைவுகூர்கிறோம்.

# பள்ளி ஆசிரியர்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்




## குழந்தைத் திருமணம்

'திருமணம்' என்பது உரிய வயதுடைய ஆண், பெண் இருவருக்கும் இடையே சமூக ரீதியாகவும் சட்டபூர்வமாகவும் நிகழ்த்தப்படும் ஓர் ஒப்பந்தம்.

பல இடங்களில் பெற்றோர் அல்லது பராமரிப்பாளரின் கட்டாயத்தாலோ அல்லது ஆண், பெண் இருவரும் மனம் விரும்பியோ இளவயதிலேயே திருமணம் செய்கிறார்கள். 18 வயதிற்கு உட்பட்ட பெண்ணுக்கும் 21 வயதிற்கு உட்பட்ட ஆணுக்கும் நடக்கும் திருமணத்தை, குழந்தைத் திருமணம் என்கிறோம். இது சட்டப்படி குற்றமாகும் .

குழந்தைத் திருமணம் உலக அளவில் பிரச்சினையாக இருந்தாலும், குறிப்பாக ஆப்பிரிக்காவிலும் தெற்கு

ஆசியாவிலும் இது முக்கியப் பிரச்சினையாக உள்ளது. சமீப காலங்களில் குழந்தைத் திருமணங்கள் நடப்பது குறைந்து வந்தாலும்கூட, கிராமப்புறங்களில் மட்டுமல்லாமல், மிகவும் வறுமையில் வாடும் மக்களிடையேயும் இது பரவலாக உள்ளது. குழந்தைத் திருமணங்களைத் தடுக்கும் வகையில் சட்டங்கள் கொண்டு வரப்பட்டாலும் கூட, சில சமூகங்களில் இந்த நடைமுறை இன்னமும் இருந்து வருகிறது.

## இந்தியாவில் குழந்தைத் திருமணம்

உலகிலேயே வளரிளம்பருவத்தினர் மிக அதிகமுள்ள நாடு இந்தியா. இந்தியாவில் திருமணமாகும் பெண்களின் சராசரி வயது மிகக் குறைவாகவே அதிகரித்துள்ளது. மாவட்ட அளவில் வீடுகளில் எடுக்கப்பட்ட கணக்கீட்டின்படி (2007-2008), 20லிருந்து 24 வயதுக்குட்பட்ட சுமார் 43 சதவீத திருமணமான பெண்கள், 18 வயதுக்கு முன்னதாகவே திருமணம் செய்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தியாவிலேயே பீகாரின் வடகிழக்குப் பகுதியில் குழந்தைத் திருமணங்கள் அதிகம் (68 சதவீதம்) நடைபெறுகின்றன. இமாச்சலப் பிரதேசத்தில் குழந்தைத் திருமணங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு (9 சதவீதம்). கிழக்கு மேற்கு மாநிலங்களில் ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், பீகார், ஜார்கண்ட், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் அதிகபட்சமான குழந்தைத் திருமணங்கள் நடைபெறுகின்றன. தமிழ்நாட்டில் திருமணமாகியுள்ள 20-24 வயதுக்குட்பட்ட

16.3 சதவீதப் பெண்கள் 18 வயதுக்கு முன்பாக திருமணம் செய்து கொண்டவர்களாக உள்ளனர்.

## குழந்தைத் திருமணமும் பெண்களும்

பெண் குழந்தைகளுக்கு குழந்தைத் திருமணம் செய்து வைப்பதால் அவர்கள் மிகக்குறைந்த வயதிலேயே கர்ப்பம் அடைகிறார்கள். அவர்களுக்கு ஊட்டச்சத்துக் குறைவு ஏற்படுகிறது. கல்வி பெறுவதற்கான வாய்ப்பு நின்று போகிறது. பொருளாதார ரீதியாக தன்னுரிமை மிக்கவர்களாக இருப்பதும் குறைந்து போகிறது. அத்துடன், 18 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்குத் திருமணம் நடத்தி வைப்பதால், அவர்கள் எந்தவிதமான ஆளுமையும் இல்லாத நிலையில் குடும்ப வன்முறைக்கு ஆளாகிறார்கள்.

பெண் குழந்தைகளைத் தொடர்ந்து படிக்க வைத்தல், அவர்களுக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல், பிறப்பு மற்றும் திருமணப் பதிவேடுகளை முறைப்படுத்துதல் போன்ற பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகும்கூட, குழந்தைத் திருமணத்தை முழுவதுமாக முடிவுக்குக் கொண்டு வர முடியவில்லை.

## குழந்தைத் திருமணத் தடுப்பு நடவடிக்கைகள்

குழந்தைத் திருமணம் என்பதை ஒரு பிரச்சினையாக அங்கீகரித்து, இந்திய அரசால் 1929-இல் சாரதா குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது பெண்களுக்கான திருமண வயது வரம்பு 15 எனவும், ஆண்களுக்கு 18 வயது எனவும் வரையறுக்கப்பட்டிருந்தது.

*1978 மற்றும் 2006இல் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்திற்குப் பிறகு, பெண்ணின் திருமண வயது 18 ஆகவும் ஆணின் திருமண வயது 21 ஆகவும் வரம்பு உயர்த்தப்பட்டது.*

*குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்தை உறுதி செய்ய அவர்களுக்கான சமத்துவமான நியாயமான உலகை பெற்றுத்தர இந்திய அரசு 2013-இல் குழந்தைகளுக்கான தேசியக் கொள்கையை வடிவமைத்துள்ளது. குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை நான்கு முக்கிய கருத்துக்களை வலியுறுத்துகிறது.*

1. *உயிர் வாழ்தல்.*

2. *உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து.*

3. *கல்வி மற்றும் முன்னேற்றம்.*

4. *பாதுகாப்பு மற்றும் பங்கேற்பு .*

*குழந்தைத் திருமண முறையை முடிவுக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும் என்று 2013ஆம் ஆண்டு செப்டம்பர் 25ஆம் தேதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சில் முக்கியத் தீர்மானத்தை நிறைவேற்றியது.*

*நமது நாட்டில் குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டாலும், சட்டத்தை தீவிரமாக செயல்படுத்துவது என்பது இன்னமும் சவாலாகவே உள்ளது.*

# நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்
## (Standard Operating Procedure - SOP)

குழந்தைத் திருமணத் தடுப்பு சம்பந்தமான சட்ட ரீதியான நடவடிக்கைகள் சிறப்பாக அமல்படுத்திட, அனைத்து துறையினரும் இணைந்து பணியாற்ற வேண்டியிருக்கிறது. சட்டத்தையும், அமல்படுத்த வேண்டிய உடனடி வழிமுறைகளையும், விளக்கும் வழிகாட்டியாக இருப்பவை தான் SOP (Standard Operating Procedure) என்றழைக்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்.

குழந்தைத் திருமணங்களைத் தடுத்து, குழந்தைகளுக்கு அவர்கள் வாழ்க்கையை மீட்டுத் தருவது சமூகத்தில் அனைத்து பெரியவர்களின் கடமை. பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக, குழந்தைகளைத் தினசரி சந்திப்பவர்கள் பள்ளிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களும், பள்ளியோடு சம்பந்தப்பட்ட பிற பெரியவர்களும்தான். குழந்தைத் திருமணங்களைத் தடுக்கக்கூடிய மிக முக்கியமான பொறுப்பு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பள்ளிக் கல்வி அதிகாரிகளுக்கும் உண்டு.

கிராமமாக இருந்தாலும் நகரமாக இருந்தாலும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் இணைந்து செயல்படுகின்றவர்கள் ஆசிரியர்கள்தான். இவர்களுக்குத்தான் குழந்தைகளது பள்ளி வருகை மற்றும் கல்வி மேம்பாடு பற்றி தொடர்ந்து தெரியும். பள்ளிக் குழந்தைகளின் மன நலம், உடல்நலம், குடும்பப் பின்னணி போன்றவை குறித்தும் மற்றவர்களைவிட அதிகமாக இவர்கள்தான் அறிந்திருக்கக் கூடும் அல்லது அறிந்திருக்க வேண்டும். எனவே அவர்கள் வேலைசெய்யும் ஊரில் குழந்தைத் திருமணம் பற்றிய தகவல் அறிந்ததும் அல்லது அதுகுறித்த சந்தேகம் ஏற்பட்டதும் உடனடியாக இவர்கள்

வேகமாகச் செயல்பட்டு அத்தகையத் திருமணங்களைத் தடுக்க வேண்டும். குழந்தைத் திருமணத் தடுப்பு சட்டத்தின் (Prohibition of Child Marriage Act, 2006 ) 16வது பிரிவின்படி அத்தகைய திருமணங்களைத் தடுக்க, குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிக்கு உதவி செய்யும் பொறுப்பு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறை அதிகாரிகளுக்கு உள்ளது.

## உடனடி செயல்பாடு:

குழந்தைகள், முக்கியமாகப் பெண் குழந்தைகள் சில நாட்களாக பள்ளிக்கு வரவில்லையென்றால் அவர்கள் வீட்டிற்கு சென்று ஏன் என்று அறிய முயற்சிக்க வேண்டும். அருகில் உள்ளவர்களிடமும் விசாரித்து குழந்தைத் திருமணத்திற்கு ஏற்பாடுகள் நடக்கிறதா என்பதை அறியவேண்டும்

**குழந்தைத் திருமணத்தை பற்றிய தகவலை அறிந்த உடனேயே பள்ளி ஆசிரியர்கள் / அதிகாரிகள் செய்யவேண்டியவை :**

- மிக அருகில் உள்ள காவல் நிலையத்திடம் அல்லது நீதித்துறை நீதிபதியிடம் தகவல் அளிக்க வேண்டும். காவல் துறையினர் முதல் தகவல் அறிக்கையை (FIR) பதிவு செய்ய வேண்டும்.

- காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட தகவலை ஏற்று முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய மறுத்தால், அல்லது அருகில் காவல் நிலையங்கள் இல்லை என்றால் நீதித்துறை நீதிபதியிடம் தகவல் அளிக்க வேண்டும்.

- காவல் நிலையத்திற்கோ நீதிமன்றத்திற்கோ செல்ல இயலவில்லை என்றால், கீழ்க்காணும் அமைப்புகளில் ஒன்றைத் தொடர்பு கொள்ள வேண்டும்:

- *1098 என்ற கட்டணமில்லா தொலைபேசி சைல்டுலைன் (Child Line)*
- *குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர் (CMPO).*
- *மாவட்ட சமூகநலத் துறை*
- *மாநில சமூகநலத் துறை*
- *குழந்தை நலக் குழுமம்*
- *காவல் துறைக் கண்காணிப்பாளர் (Superintendent of Police )*
- *மாவட்ட ஆட்சியர்*
- *இத்தகைய செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்*

- *பாதிக்கப்பட்ட குழந்தையை உடனடியாக அல்லது 24 மணிநேரத்திற்குள் 2000 ஆம் ஆண்டு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின் கீழ் குழந்தை நலக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். அதுவரை குழந்தையை 2015 ஆம் ஆண்டு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின் கீழ் (Juvenile Justice Act) பதிவு செய்யப்பட்ட மாநில அரசு அங்கீகாரம் பெற்ற காப்பகத்தில் அந்தக் குழந்தையைப் பாதுகாப்பாக இருக்கச் செய்ய வேண்டும்.*

- *வாக்குமூலம் பதிவுசெய்யப்படும்போது அல்லது விசாரணையின் போது தேவைப்பட்டால் அங்கே இருந்து அக்குழந்தைக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.*
- *அக்குழந்தையை மீண்டும் மீண்டும் தன் வாக்குமூலத்தை வெவ்வேறு அதிகாரிகளிடம் கூறச்செய்து, அவர்களது மன நலம் பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் .*

- பாதிக்கப்பட்ட குழந்தையை அல்லது குழந்தைகளை காவல் நிலையத்தில் இருக்கச் செய்யக் கூடாது.

- பாதிக்கப்பட்ட குழந்தையை தேவையற்ற அல்லது உடனடி தேவைக்கு அதிகமான மருத்துவ பரிசோதனைகள் அல்லது மகளிர் நல மருத்துவப் பரிசோதனைகளுக்கு ஆளாக்கக் கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும் .

- பாதிக்கப்பட்ட குழந்தைக்குத் தேவையான மருத்துவ உதவி, மன நல ஆலோசனை, மறுவாழ்வு ஆதரவு போன்ற எல்லா விதமான உதவிகளையும் ஆதரவையும் அளிக்க குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரியுடன் (CMPO) இணைந்து செயல்பட வேண்டும். தேவைப்பட்ட உதவிகள் அளிக்க சுகாதாரத் துறை, குழந்தை நலக் குழு மற்றும் அரசுசாரா அமைப்புகளின் உதவியை நாடலாம்.

## மன நிலை மாற்றம்

- திருமண ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள இரு சாரார் வீடுகளுக்கும் நேரில் சென்று, அவர்களின் பெற்றோருக்கு குழந்தைத் திருமணங்கள் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதை சொல்லி அறியவைத்து, அத்திருமணத்தை நடத்த வேண்டாம் என்று அறிவுறுத்தலாம். அவ்வாறு செய்ய, குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிக்குத் துணை நிற்க வேண்டும்.

- குழந்தைகளிடம் பேசி அவர்களுக்கு குழந்தை திருமணத்தைப் பற்றியும் அதன் விளைவுகளையும் புரியவைத்து, அது குறித்த சட்டங்களைச் சொல்ல வேண்டும். அத்திருமணத்தை மறுக்கும் உரிமை

அவர்களுக்கு உண்டு என்பதையும் உறுதியாக எடுத்துரைக்க வேண்டும்..

- குழந்தைத் திருமணப் பிரச்சினைகளில் சம்பந்தப்பட்ட பெண்ணைப் பற்றி அவளிடம் நேரடியாகவோ அவள் காதில் படும்படியாகவோ பள்ளியில் மற்ற குழந்தைகள் அல்லது ஆசிரியர்கள் பேசக்கூடும். பள்ளியில் ஏதோ ஒரு குழந்தைக்கு இப்படி நடக்கும்போது இதை விழிப்புணர்வுக்கான செயலாக ஆக்க வேண்டுமே தவிர வம்புக்கான விஷயமாக்கக்கூடாது .

- முழுமையாக அக்குழந்தையின் தேவைகளையும் வீட்டு சூழ்நிலைகளையும் மதிப்பிட வேண்டும் / மதிப்பிட குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிக்கு உதவ வேண்டும் . *(Home Study and Needs Assessment)*

- இந்நிகழ்வுக்குப்பின் பெற்றோரால் ஏற்கப் படவில்லை என்றால் குழந்தையின் நீண்ட கால மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பு குறித்து திட்டமிட குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிக்கு உதவி செய்ய வேண்டும்.

- குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தேவைப்படும் மருத்துவ உதவி மற்றும் மன நல ஆதரவு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

- பாதிக்கப்பட்ட குழந்தை தொடர்ந்து பள்ளிக்கு வருகிறாரா என்று கண்காணிக்க வேண்டும். அவ்வாறு வரவில்லை என்றால் அவர்கள் வீட்டிற்குச் சென்றும், அருகில் உள்ளவர்களிடம் விசாரித்தும் காரணத்தை அறிய முயற்சிக்க வேண்டும். குழந்தைத் திருமணம் பற்றி சந்தேகம் ஏற்பட்டால் குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிக்கும் போலீசாருக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும்.

- குழந்தைத் திருமண நிகழ்வுகளின் போது, அது குறித்து தொடர்பு கொள்ள வேண்டிய அமைப்புகள் மற்றும் நபர்களின் தொடர்பு விவரங்களை (பெயர், தொலைபேசி எண், முகவரி, மின்னஞ்சல்) முன்னதாகவே சேகரித்து வைத்திருக்க வேண்டும்.

## நீண்ட காலச் செயல்பாடு:

- தங்கள் குடும்பத்தில் குழந்தை திருமணங்கள் நடக்காது என்பதையும் வரதட்சணை கொடுக்கல் வாங்கல் இருக்காது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- ஊரில் குழந்தைத் திருமணம் நடந்தால் அத்திருமணத்தை தடுத்து நிறுத்துவதையே முதல் நடவடிக்கையாக மேற்கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் அந்தத் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக்கூடாது.
- குழந்தைத் திருமணத் தடுப்புக்காக மாவட்டத்தில் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.
- பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டங்கள், குடியரசு தினம், சுதந்திர தினம், பள்ளி ஆண்டு விழா, விளையாட்டு தின விழா என வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் குழந்தைத் திருமண பழக்கம் மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரான பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூற வேண்டும் .
- பள்ளிக்கூடங்களில் குழந்தைத் திருமணத்தால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி நாட்டுப்புறக்கலை / நாடகங்கள் மூலம் கருத்துக்களைக் கூறலாம்.

நாடகங்களுக்குப் பிறகு அது பற்றி விவாதிப்பதன் மூலம் மாணவர்கள் மனதில் உள்ள கருத்துக்களை அறியலாம். இந்த மாதிரியான கலை வடிவங்கள் மூலம் கருத்துக்களை பகிர்வது நம் வேலையை சுலபமாக்க உதவுகிறது.

- குழந்தைத் திருமணப் பிரச்சினைகளில் போராடி வெற்றிபெற்று, படிப்பை தொடர்ந்த, தன் சொந்த காலில் நின்ற பெண் குழந்தைகள் பற்றிய உண்மைச் சம்பவங்ளை வகுப்பறைகளில் பகிர்வதன் மூலம் அம்மாதிரியான சூழ்நிலையில் இருக்கும் மற்ற பெண்களுக்கு தைரியத்தையும், எதிர்த்து நிற்கும் மன வலிமையையும், சிந்தித்துப் பார்க்கும் எண்ணத்தையும் தர முடியும்.

- வாழ்க்கை என்பது திருமணம் மட்டுமல்ல. வளரிளம் பருவம் என்பது திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான பருவம். அதிலும் குறிப்பாக, பெண் குழந்தைகள் தங்கள் சொந்தக்காலில் நிற்பதற்கான திறமைகளை வளர்த்துக் கொண்ட பிறகுதான் திருமணம் பற்றி யோசிக்க வேண்டும் என்பதை அவர்கள் மனதில் அழுத்தம் திருத்தமாக பதியும்படியாக வகுப்பறைகளில் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் எடுத்துச் சொல்லுங்கள்.

- குழந்தைத் திருமணம் பற்றி பேச சிறப்புக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து காவல் அதிகாரிகள் மற்றும் குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகள் மூலம் இப்பிரச்சினைகள் பற்றி விளக்கிக் கூறலாம்.

- மக்கள் பார்வையில் படும்படியாக, குழந்தைத் திருமணத்தால் ஏற்படும் பாதிப்புகள் சம்பந்தமான

படங்கள் மற்றும் செய்திகளை சுவர்களில் எழுதி வைக்கலாம்.

- குழந்தை பராமரிப்புக்குழு, பள்ளி மேலாண்மைக் குழு, கிராம நீதிக் குழு போன்ற கிராமத்தில் உள்ள வெவ்வேறு அமைப்புகளில் உறுப்பினர் ஆகலாம்.
- குழந்தைத் திருமணம் நடக்கக் கூடும் என்று சந்தேகம் இருக்கும் பள்ளிக் குழந்தைகள், உள்ளூர் குழந்தைகள் பற்றிய தகவல்களைத் திரட்டித் தந்து, குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி தகுந்த நடவடிக்கை எடுக்க உதவலாம்.
- தங்கள் வீட்டு குழந்தைகளுக்கு திருமணம்தான் ஒரே தீர்வு என்று நினைக்கும் குடும்பங்களைச் சந்தித்து வளரிளம் பருவத்தினரின் வளர்ச்சிக்கு உதவும் அரசின் சட்டங்கள், திட்டங்கள் பற்றி விவரங்களைக் கூறலாம். அக்குடும்பங்களை சம்பந்தப்பட்ட துறைகளுடன் இணைத்து வெவ்வேறு அரசு நலத்திட்டங்களை பெறுவதற்கு உதவலாம்.
- குழந்தைகளின் சிறந்த எதிர்காலத்திற்கு கல்வி முக்கியம்என்பதுகுறித்துக்குடும்பஉறுப்பினர்களுடன் பேசலாம். திருமணத்திற்காக பள்ளிக் கல்வியை விட்டுவிட்டு செல்வதற்குப் பதில், பள்ளிக்கல்வியைப் படித்து முடிக்கச் சொல்லி வலியுறுத்தலாம்.